ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# மணக்கால் நம்பி




Sri ManakkAl Nambi (Ramamisrar)

*ஆசார்ய குருபரம்பரையில், உய்யக்கொண்டாரின் ப்ரதான சீடராக திகழ்ந்தவர் மணக்கால் நம்பி. இவர் சோழ நாட்டின் ஸ்ரீரங்கத்திற்கு அருகே உள்ள மணக்கால் என்னும் கிராமத்தில், கலியுகம் 3900க்கு மேல் விரோதி வருடம் மாசி மகத்தில் திருவவதாரம் செய்தார். ஸ்ரீராம மிச்ரர் என்பது மணக்கால் நம்பியின் இயற்பெயராகும். நம் சம்பிரதாயத்தில் இவருக்கு மணக்கால் நம்பி என்கிற திருநாமமே பிரஸித்தமாக உள்ளது.*

***தனியன் 2:***

***அயத்நதோ யாமுனம் ஆத்மதாஸம்***
***அலர்க்க பதார்ப்பண நிஷ்க்ரயேன***
***ய: க்ரீதவான் ஆஸ்தித யௌவராஜ்யம்***
***நமாமிதம் ராமமேய ஸத்வம்.***

***சிஷ்யர்கள்***
*ஆளவந்தார், திருவரங்கபெருமாள் அரையர், தெய்வத்துக்கரசு நம்பி, பிள்ளைஅரசுநம்பி, சிறுபுள்ளுடையார் பிள்ளை, திருமாலிருஞ்சோலை தாஸர், வங்கிபுரத்து ஆச்சி.*

*மணக்கால் நம்பி, தம் ஆச்சார்யரான உய்யக் கொண்டாருக்கு, கையங்கர்யம் செய்வதை தம் பேறாகக் கொண்டவர். அங்ஙனம் , கைங்கர்யம் செய்து கொண்டிருக்கும் வேளையில், உய்யக்கொண்டாரின் தேவிகள் பரமபதித்து விட்டதால், மணக்கால் நம்பி ஆசார்யன் திருமாளிகை மற்றும் அவருடைய குமாரத்திகளை வளர்க்கும் பொறுப்பையும் செவ்வனவே செய்து வந்தார். ஒருமுறை ஆசார்யனுடைய திருகுமாரத்திகள் காவிரியிலிருந்து திரும்பி வரும் பொழுது, வாய்க்காலின் சேற்று நீர் ஓர் குட்டை போல் இருக்க, அதை கடக்க அவர்கள் தயங்கிய பொழுது, ஆசார்யனின் ஆணைப்படி கூடவே வந்த மணக்கால்நம்பி , வாய்க்காலின் குறுக்கே கிடந்து, தமது முதுகின்மீது நடந்து வாய்க்காலை கடக்கச் சொல்ல, அப்படியே இரு குமாரத்திகளும் கடந்து வீடு திரும்பினர். மணலினால் ஆன திருப்பாதங்கள் முதுகின் மீது பட்டதால் (மணல் கால்) மணக்கால் நம்பி என்று அழைக்கப்பட்டார். நடந்த எல்லா சம்பவங்களையும் தம் திருக்குமாரத்திகளின் வாயிலாக கேட்டுணர்ந்த உய்யக்கொண்டார் மிகவும் உகந்து, அவரது திருவடித் தாமரைகளால் நம்பியினுடைய திருமுடியை அலங்கரித்தார். உடனே உய்யக்கொண்டார் தம் சீடரிடம் என்ன வேண்டும் என்று கேட்க, மணக்கால் நம்பி*

*"உற்றேன் உகந்து பணிசெய்யும்*
*உனபாதம் பெற்றேன், இதே இன்னம் வேண்டுவது எந்தாய்"*

*என்று பணிவுடன் கூற, உய்யக்கொண்டார் போர உகந்து, மீண்டும் ஒரு முறை த்வயமந்த்ரோபதேசம் செய்தார்.*

*உய்யக்கொண்டார் பரமபதிக்கும் பொழுது, மணக்கால் நம்பியை தர்சன ப்ரவர்த்தராக நியமித்து, நம்பியிடம் தமது ஆசார்யரான நாதமுனிகளின் நியமனத்தை சொல்லி, தம்மால் உபதேசிக்கப்பட்ட அர்த்த விசேஷங்களை , நாதமுனிகளின் திருப்பேரரான யமுனைத்துறைவருக்கு(ஆளவந்தார்)*

உபதேசிக்குமாறு நியமித்து, ஸ்ரீமத் நாதமுனிகளைத் த்யானித்து கொண்டே திருநாடு அலங்கரித்தார்.

***திருத்திப் பணிகொண்டது***

*ஆளவந்தார் மிகவும் அறிவுத்திறம் நிறைந்த அரசராக இருந்தமையால், நமது ஸம்ப்ரதாயத்தை மறந்து ,ராஜ்ய நிர்வாகத்திலேயே கவனம் செலுத்தி வந்தார். மணக்கால் நம்பி, ஆளவந்தாரை தனது ஆசார்யனின் நியமனப்படி திருத்தி, நம் ஸம்ப்ரதாய விஷயங்களில் ஈடுபடுத்த வேண்டும் என்று நினைத்து, ஆளவந்தார் தூதுவளைக் கீரையை விரும்பி உண்ணும் பழக்கம் உடையவராதலால் தினமும் துதுவளைக்கீரையை அரண்மனையில் உள்ள திருமடப்பள்ளி கைங்கர்யபரரிடம் கொடுத்து வந்தார். நம்பி திடீரென்று தூதுவளைக் கீரையை கொடுப்பதை நிறுத்தி விட்டபடியால், கீரையை உணவில் காணாத ஆளவந்தார் கைங்கர்யபரரிடம்ஏன் கீரை இல்லை என்று கேட்க, அதற்கு கைங்கர்யபரர் கீரையைக் கொடுத்து வந்த ஸ்ரீவைஷ்ணவர் கீரை கொடுப்பதை நிறுத்தி விட்டார் என்று கூற கேட்டவுடன், ஆளவந்தார் அந்த ஸ்ரீ வைஷ்ணவரை தம்மிடம் அழைத்து வருமாறு சேவகர்களைப் பணிக்க , அவர்களும் அவ்வண்ணமே செய்தனர். ஆளவந்தார் மணக்கால் நம்பியிடம் ஏதேனும் செல்வம் வேண்டுமா என்று வினவ, நம்பி அதற்கு நாதமுனிகள் கொடுத்த உண்மையான செல்வம் (ஸ்ரீ வைஷ்ணவஸ்ரீ) அடியேனிடம் உள்ளபடியால் , அதை கொடுக்கத் தான் வந்தோம் என்று கூறி பகவத்கீதையினுடைய அனைத்து விசேஷ அர்த்தங்களையும்,நாலாயிர டிவ்ய ப்ரபந்தத்தையும் ஆளவந்தாருக்கு கற்பித்தார். ஆளவந்தார் பகவத்சாக்ஷாத்காரத்தை விளக்குமாறு கேட்டார். நம்பி சரம ஸ்லோகத்தை அவருக்கு உபதேசித்து பிறகு ஆளவந்தாரை திருவரங்கத்துக்கு அழைத்துச் சென்ற போது, பெரிய பெருமாளின் அழகில் ஈடுபட்ட ஆளவந்தார் உலகப்பற்று அனைத்தையும் துறந்து,நம் சச் சம்பிரதாயத்தில் ஆழங்கால் பட்டு அதை வளர்த்தார். இதன் மூலம் மணக்கால் நம்பி, நாதமுனிகளின் நியமனத்தை நிறைவேற்றி, எப்பொழுதும் நாதமுனிகளைத் தியானித்து க் கொண்டு,ஆளவந்தாரை நமது தரிசனத்தை பரப்புமாறும் அதோடு அல்லாமல் அடுத்த தர்சன ப்ரவர்த்தகரைத் தேர்ந்தெடுத்து நியமிக்குமாறு கட்டளையிட்டு , தம் ஆசார்யனின் திருவடிகளைத் தியானித்துக் கொண்டே மணக்கால் நம்பி திருநாடு அலங்கரித்தார்.*

-----------------------------